உ

நல்லாற்றூர்

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

இயற்றியருளிய

சோண சைல மாலை
நால்வர் நான்மணிமாலை
நன்னெறி

மயிலம்—பொம்மபுர ஆதீனம்

மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு :

உ

ஸ்ரீ பாலசித்த குரவே நம ;

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க

நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

இயற்றியருளிய

சோண சைல மாலை

நால்வர் நான்மணி மாலை

நன்னெறி

இது

திருக்கயிலாய பரம்பரை, மயிலம் பொம்மபுர ஆதீனம்,

பத்தொன்பதாம் பட்டம் அருள்மிகு குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம் வெளி வருகின்றது.

பதிப்பாசிரியர் :

குமாரசிவ. இராசேந்திரன் பி.காம்., பி.எல்.

திருமடம், மயிலம்,

உ

ஸ்ரீ பாலசித்த குரவே நம

குரு மரபு வாழ்த்து

பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின் வீரசைவ
பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக்கடலுதித்த சங்குகன்னப் பாலசித்தர்
வரமயிலார் முருகனுப தேசமுடன் வந்துகுரு வாகி யாண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயாற் குருமரபு சிறந்து வாழி.

உ

சிவமயம்

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க

பதிப்புரை

மயிலம்—பொம்மபுர ஆதீனம் ஆதி **ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின்** சீடர் நல்லாற்றூர் **ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்** ஆவர். கற்பனைக் களஞ்சியமாகிய ஸ்ரீ சிவப் பிரகாச சுவாமிகள் இயற்றிய நூல்கள் சாத்திரம், காவியம், தோத்திரம் என்பனவாக முப்பத்திநான்காம். அவற்றுள் ஏசுமத நிராகரணம், திருவெங்கையலங்காரம், தலவெண்பா கொச்சகக் கலிப்பா என்னும் நூல்கள் கிடைக்கப் பெற வில்லை. மற்றையவை பலரால் பல காலங்களில் அச்சேற்றப் பட்டுள்ளன. மயிலம்—பொம்மபுர ஆதினம் 18-ஆம் பட்டம் **ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்** அவர்கள், கிடைக்கப் பெற்ற நூல்கள் அனைத்தையும் '**நல்லாற்றூர் சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள்''** என்னும் தலைப்பில் ஒரே நூலாக கி. பி. 1944-இல் அச்சேற்றி வெளியிட்டருளினார்கள்.

இன்று, செய்யுள் வடிவில் உள்ள நூல்கள் அனைத் துக்கும் உரையெழுதுவித்துத் தமிழுலகுக்கு வழங்க வேண்டு மென்று திருவுளம் கொண்டு, மயிலம்—பொம்மபுர ஆதீனத்து **19-ஆம் பட்டத்து இருந்து** அருளாட்சி புரிந்து வருகின்ற **ஸ்ரீ—ல—ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் மகா சந்நிதானம்** அவர்கள் குருபூசை முதலிய விழாக் காலங்களில் உரை நூல்களை வெளியிட்டு வருகிறார்கள்,

அங்ஙனம் வெளியிடும் அளவில் திருவுளம் அமைதி கொள்ளாமல், தமிழ் மாணவர் யாவரும் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்களை நன்கு பயின்று, அவற்றிற் புலமை எய்த வேண்டும் என்றும், அதற்கு ஆவன செய்தாக வேண்டும் என்றும் திருவுளம் பற்றியிருந்தார்கள்.

இந்நிலையில் சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத் துறைப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்ற டாக்டர் வை. இரத்தின சபாபதி, எம். ஏ. பி. எச். டி., அவர்கள் 23-11-93 அன்று சந்நிதானத்தின் திருவடிக்கு ஓர் விண்ணப் பம் செய்தார்கள். டாக்டர் வை. இரத்தின சபாபதி அவர் களும், வேளாண்துறை விஞ்ஞானி டாக்டர் து. கணபதி. பி. எஸ்சி., (விவசாயம்) அவர்களும், வீரசைவ முரசு ஆசிரியர் கவிஞர் ஆ, திருவாசகன் அவர்களும், சேர்ந்து

> ''சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்களில் தமிழ் மாணவர்-தமிழ்ப் புலவர் மாணவர் சிறந்த புலமை பெறவேண்டும்; அதற்கு ஒரு பெரும் பரிசு ரூ. 5,000/-அளித்தல் வேண்டும்; அதற்காக ஆண்டு தோறும் மாணவர்களுக்கு, ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்களில் வாய்மொழித் தேர்வும், எழுத்துத் தேர்வும் வைத்து முதன்மை பெறும் மாணவர்க்கு அப்பரிசினை அளித்தல் வேண்டும்.''

என்று தீர்மானித்தனர்.

இத்தீர்மானத்தையே பேராசிரியர் டாக்டர் வை. இரத்தின சபாபதி அவர்கள் குருமகா சந்நிதானத் திடம் விண்ணப்பித்துச் செயற்படுத்த உதவிபுரிந்து அருளு மாறு வேண்டினர். அத்துடன் ''கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் செந்தமிழ் நூல்களைப் பன்னோக்குப் பணிநிலையில் உலகளாவிய திறனில் வரலாற்றுப் பெருநோக்கில் தத்துவ இலக்கியச் செறிவுடன் வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், **சிவப்பிரகாசர் செந்தமிழ் உயர் ஆய்வு மையம்** (Centre for Advanced

Study in the Works of Sivaprakasa SwamiGal) என்ற நிறுவனம் தொடங்கப் பெற்றது. இதன் உறுப்பினர்கள்

1. பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் அவர்கள்.

2. குமாரசிவ. இராசேந்திரன், பி. காம்., பி. எல்., அவர்கள்.

3. டாக்டர் வை. இரத்தினசபாபதி, எம். ஏ. பிஎச். டி., அவர்கள்.

4. டாக்டர் டி. கணபதி, பி. எஸ்சி., (விவசாயம்) அவர்கள்

5. கவிஞர் திலகம், வீரசைவமுரசு ஆசிரியர் திரு ஆ. திருவாசகன் அவர்கள்,

6. டாக்டர் துரை. காத்திகேயன், எம்.ஏ.,பிஎச்,டி அவர்கள் முதல்வர் செயற்படுத்துநர் என அமைக்கப் பெற்றுள்ளனர். இவர்களின் விருப்பப்படி முதன்மைச் செயலாக இப்பரிசுத்திட்டம் அமைக்கப் பெற்றது.'' என்றும் விண்ணப்பித்தார்கள்.

மகா சந்நிதானம் அவர்கள் தமது எண்ணம் இவ்வகையில் நிறைவேறக் குருவருள் துணை புரிவதை வியந்து ஒப்புதல் அளித்தார்கள்.

முதன் முதலில் மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி மாணவர்களை இப்போட்டியில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்று பரிசளிப்போர் விரும்பினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்படி சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்களுள் சோண சைல மாலை நால்வர் நான்மணி மாலை, நன்னெறி என்னும் மூன்று நூல்களை வரும் ஆண்டிற்கான நூல்களாகக் கொண்டனர்.

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் முதல் முதலில் பாடிய நூல் சோண சைல மாலை. அதனொடு நால்வர் நான்மணி

மாலையைச் சேர்த்தனர். சோண சைலமாலை முதற் பாடலில் ''அண்ணல் மாபுகழ் மூவர்'' என்பது முதலில் தொடங்கப் பெறுகிறது. மூவராவார் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆவர். எனவே மூவரோடு மாணிக்க வாசகரையும் நினைந்து, நால்வர் நான்மணி மாலை என்னும் நூலையும் சேர்த்தனர். இப்பரிசு, மாணவர் நலம் ஒன்றையே—அதாவது மாணவர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் நூல்களில் ஆழ்ந்த புலமை பெற வேண்டும் என்ற ஒன்றையே நோக்கமாகக் கொண்டது. இப்பரிசை அளிப்பவர்கள், பிறர் வேண்டாமல் தாமே முன் வந்து உதவி செய்கின்றனர். அதனால் பயன் கருதாது பிறர்க்குதவி செய்தல் சிறந்த நன்னெறியாகும் என்ற அடிப் படையில் அக்கருத்தையே முதற்பாடலாகக் கொண்டுள்ள நன்னெறி என்னும் நூலை அவற்றுடன் சேர்த்தனர். அப்பாடல்,

''என்று முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து.''

என்பதாகும்.

இம்மூன்று நூல்களிலும் மாணவர் பயிற்சிபெற அவர் கட்கு நூல்கள் தேவை. அவற்றையும் சந்நிதானம் தாமே வழங்குவதாகத் திருவுளம் கொண்டு அம்மூன்று நூல் களையும் சேர்த்து ஒருநூலாக வெளியிட்டு அருளுகிறார்கள்.

மேற்படி பரிசின் பெரும்பயனைத் தமிழ் உலகம் தமிழ் மாணவர்—தமிழ்ப் புலவர் மாணவர் தம் புலமை நலம் காட்டி வாய்க்கப் பெறுவதுவே பரிசு வழங்குவோர்க்கும், பெருந் துணைபுரிந்தருளும் மகா சந்நிதானத்துக்கும் செய்யும் நன்றியாகும்.

மேற்படி பரிசின் பெரும்பயனைத் தமிழ் மாணவருலகம் நன்கு பயன்படுத்திக் கொள்ள நல்ல ஆலோசனைகளை

வழங்கிவரும் நமது கல்லூரியின் மேனாள் முதல்வர் திரு ஆ. சிவலிங்கனார் அவர்களுக்கும், இத்திட்டத்தினைக் கல்லூரியில் அறிமுகப்படுத்தி மாணவர்களுக்கு நன்கு ஊக்க மூட்டி, பயிற்சியளித்து வரும் நமது கல்லூரி முதல்வர் டாக்டர் து. கார்த்திகேயன், எம். ஏ. பி. டி, பிஎச். டி, அவர்களுக்கும் இத்திட்டம் நன்கு சிறக்க ஒத்துழைப்பு நல்கியும், இப்பதிப்பில் இடம் பெறும் மூன்று நூல்களிலும் மாணவர்கள் புலமைபெற சிறப்புப் பயிற்சி அளித்தும் வருகின்ற நமது கல்லூரியின் பேராசிரியப் பெருமக்களுக்கும் மயிலம் முருகனின் திருவருளும், ஸ்ரீ பாலசித்தர், ஆதி சிவஞான பாலய சுவாமிகளின் குருவருளும் நிறைவதாகுக.

இச்சிறந்த பரிசுத் தேர்வுக்கான மூன்று நூல்களையும் ஒரே நூலாகப் பதிப்பிக்கும் பேற்றினைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அடியேனுக்கு அருளினார்கள். இது யான் பெற்ற பெரும் பேறாகும். இப்பதிப்பினை நன்கு பயன் படுத்தி மாணவர்கள் சிறக்க வேண்டும் என்று மயிலம் முருகன் திருவருளையும், ஆதீன நிறுவன முதற் குரவராகிய ஸ்ரீ பாலசித்தரையும், முருகனருள் பெற்ற ஆதி சிவஞான பாலய சுவாமிகளின் வழி வரும் 19-ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் திருவுளத்தையும் போற்றி வணங்குகின்றேன்.

இந்நூல் வெளிவர உதவி புரிந்தவர்களுக்கும், இந்நூலைச் செப்பமாக அச்சேற்றிய சென்னை மூவேந்தர் அச்சகத்தார்க்கும் திருவருளும் குருவருளும் நிறைவன வாகுக.

அருள்மிகு குருமகா சந்நிதானங்களின்
திருவுளப் பாங்கின் வண்ணம்,

மயிலம்
டிசம்பர், 1993

குமாரசிவ. இராசேந்திரன்,
பி. காம் பி. எல்.,
திருமடம்,

உ

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் வரலாறு

"சான்றோர் உடைத்து" என பாராட்டப் பெற்ற தொண்டைநாட்டின் தலைநகராகிய **காஞ்சிமா**நகரில் சைவ வேளாண் குலத்தினர்க்குத் தீட்சா குருவாய் விளங்கிய **குமாரசாமி தேசிகர்** என்பார் இன்றைக்கு ஏறத்தாழ 375 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து வந்தார். அப்போது அவர் மகப்பேறின்றி மனம் வருந்திஅண்ணாமலை அண்ணலை வழி பட்டு வந்தார், இறையருளால் அவருக்குச் **சிவப்பிரகாசர், வேலையர், கருணைப்பிரகாசர்** எனப்பெயரிய மூன்று புதல் வர்களும். ஞானாம்பிகைஎன்னும் பெண்மகவும்வாய்த்தனர் அவர்களுக்கு வீரசைவ நெறிப்படி இலிங்கதாரணஞ் செய் வித்து மகிழ்ந்திருந்தார் தம் மக்கள் கற்றற்குரிய பருவம் எய்துகையில் குமாரசாமி தேசிகர் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி எய்தினார்,

சிவப்பிரகாசர் இயற்கையிலேயே மதிநுட்பமும், இறை யருளும், உடையவராகத் திகழ்ந்தார். தம் இளவல்களையும் தம்மையொத்த தமிழ்ப்புலமையுடையவராக்கினார். ஒரு முறைசிவப் பிரகாசர்தம் இளவல்களுடன்திருவண்ணாமலை சென்று ஆலயத்திற்குத் தெற்கு வீதியிலிருந்த தம் குருதே வரைக்கண்டு வணங்கி சிலநாள் அங்கு தங்கியிருக்கையில் அண்ணாமலையாரை வணங்கி மலைவலம் வந்தார்கள். அப்போது சிவப்பிரகாசர் அம்மலையை வருணித்தும், மலை யாய் நின்ற பெருமானைத் துதித்தும், **சோணசைலமாலை** எனும் அரிய பொருள் பொதிந்த நூறு ஆசிரியவிருத்தங்கள் உள்ள நூலைப் பாடினார்கள்.

பின்னர். இவர்கள் தென்னாடு நோக்கிச் சென்றனர்' திருச்சி மாவட்டம் பெரம்பலூர் அருகில் உள்ள துரை மங்கலம் எனும் ஊரை அடைந்தபோது, அவ்வூரில் சிவலிங்கதாரணமுடையவராயும், குரு, லிங்கசங்கம பத்தியிற் சிறந்தவராயும் விளங்கிய இலிங்காரெட்டியார் எனும் செல்வந்தர், சுவாமிகள் வருகையைக் கேள்வியுற்று சுவாமிகளை வந்து தரிசித்து மகிழ்ந்து, அவ்வூரில் தங்கி யிருக்குமாறு வேண்டி, திருமடம் ஒன்றை அமைத்துக் கொடுத்தார். அங்கு சுவாமிகள் சிறிது காலம் தங்கியிருந் தார்கள். பின்னர், சுவாமிகள் இலக்கண நூல்களில் தமக் குண்டான ஐயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளக் கருதினார்கள். அதன் பொருட்டு திருநெல்வேலிக்கு அருகில் இருந்த சிந்துபூந்துறையிலிருந்த வெள்ளியம்பலவாணத் தம்பிரான் அவர்களைக் கண்டு தம் கருத்தை அறிவித் தார்கள் அதற்கு அவர், ''இலக்கியப் பயிற்சியை அறிந்த பின்னரன்றோ இலக்கணம் கற்பிக்க வேண்டும்மனக்கூறி, 'கு' என்னும் எழுத்தையே முதலும் முடிவுமாக அமைத்து ''ஊருடையான்'' என்னும் சொல் இடையே வர ஒரு வெண்பாப் பாடுக எனக் கூறினார் உடனே சுவாமிகள் ஒரு பாடலைப்பாட அதன் யாப்பமைதியையும் சொல்லாட்சித் திறன், அணிநலன் ஆகியவற்றையும் கண்டு தம்பிரான் அவர்கள் சுவாமிகளைப் பாராட்டி நுங்கட்கு யான் பாடங்கூறும் ஆற்றலுடையேன் அல்லேன் எனக்கூறி, நுங்கள் இளவல்களுக்குரிய ஐயங்களைத் தெளிவிப்பேன் என்றார். அதன்படி சின்னாட்களில் அவர்தம் ஐயங்களை வினவித் தெளிவுபடுத்தினார்.

பின்னர், சுவாமிகள் வெள்ளியம்பல வாணத் தம்பிரானின் விருப்பத்திற்கேற்ப திருச்செந்தூரில் அவரை இகழ்ந்துரைத்து வந்த புலவர் ஒருவரை அடக்குதற்காக அவருடன் போட்டியிட்டு வென்றார். அப்போது பாடப் பெற்ற நூலே **திருச்செந்தில் நிரோட்டகயமக அந்தாதி** எனும் நூல். இஃது முப்பது கட்டளைக் கலித்துறைப் பாக்களால் ஆனது.

சிறிது காலம் திருநெல்வேலியில் தங்கியிருந்து பின்னர் சிவத்தலங்கட்குச் சென்று வழிபட்டு வருகையில் மீண்டும் துரைமங்கலம் போந்தார். அங்கு இலிங்கா ரெட்டியாரின் குமாரர் அண்ணாமலைரெட்டியார் வெங்கனூரில் பழமலை நாதருக்கு ஆலயத்திருப்பணி செய்யத் தொடங்கினார். சுவாமிகள் வருகையால் மகிழ்ந்த ரெட்டியார் தம் மிடத்திற் கருகிலேயே சுவாமிகளுக்கு ஒரு திருமடம் அமைத்துக் கொடுத்தார். அங்கு தங்கியிருந்த சுவாமிகள் அத்தலத்தி லிருந்த பழமலைநாதர் மீது **திருவெங்கைக் கோவை திருவெங்கைக்கலம்பகம், திருவெங்கைஉலா, திருவெங்கை அலங்காரம்** என்னும் நான்கு நூல்களை இயற்றியருளி னார்கள்.

சுவாமிகளுக்கு இல்லறத்தில் நாட்டமின்மையால் தம் இளவல்களின் கருத்தறிந்து உரிய பருவத்தில் அவர்கட்கு மணம் செய்வித்து இல்லறம் நடத்த ஆவன புரிந்தார்.

பின்னர் சுவாமிகள் சிதம்பரத்திற்கு வந்திருந்தபோது **சிவப்பிரகாச விகாசம், தருக்க பரிபாஷை, சதமணிமாலை நால்வர் நான்மணிமாலை** ஆகிய நூல்களைச் செய் தருளினார்கள்.

அங்கிருந்து சுவாமிகள் காஞ்சிபுரத்திற்குப் புறப்பட்டுச் செல்கையில் வழியில் பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் சந்தித்தார்கள். அவர்மூலம் பொம்மபுரத்தில் இருந்த சிவஞானபாலயதேசிகர் குறித்து அறிந்தார். ''மானுடரைப் பாடேன்'' என்றிருந்த சிவப்பிரகாச சுவாமிகள் முருகப் பெருமானுடைய ஆணையின்படி அக்காலத்தில் சிவாநுபூதிச் செல்வராய் பொம்மபுரத்தில் விளங்கிய ஸ்ரீ சிவஞான பாலய தேசிகரைத் தம் ஞான குருவாகக் கொண்டார். அவர்கள்மீது **நெஞ்சுவிடு தூது, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், கலம்பகம், திருப்பள்ளி எழுச்சி** ஆகிய ஐந்து நூல்களை இயற்றியருளினார்கள் தமது தங்கை ஞானாம்பிகையை சாந்தலிங்கருக்கு மணமுடித்து வைத்தார்கள்.

காஞ்சிபுரத்தில் சுவாமிகள் தங்கியிருக்கையில் பிற மொழி நூல்கள் சிலவற்றைத் தமிழில் செய்தருளினார்கள். அவற்றுள் **வேதாந்த சூடாமணி சித்தாந்தசிகா மணி, பிரபுலிங் லிங்கலீலை**ஆகியன குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

பின்னர், தம் ஞானாசிரியர் விழைந்த வண்ணம் சுவாமிகள் விருத்தாசலம் என்னும் திருத்தலமடைந்து அங்குள்ள இறைவன் இறைவியை வணங்கி **பழமலையந்தாதி, பிட்சாடண நவமணிமாலை** முதலிய ஐந்து நூல்களை இயற்றியருளினார்கள்.

இவைதவிர இட்டலிங்கப் பெருமான்மீது இட்டலிங்க அபிஷேக மாலை, கைத்தல மாலை, சிவநாம மகிமை நிரஞ்சனமாலை நெடுங்கழிநெடில், குறுங்கழிநெடில் ஆகிய நூல்களைச் செய்தருளினார்கள், மேலும் சில புராணங் களையும், நன்னெறி முதலிய வேறு சில நூல்களையும் அருளிய சுவாமிகள் அவ்வப்போது சுவை மிகுந்த தனிப் பாடல்கள் பலவற்றையும் இயற்றியுள்ளார்கள். வெவ்வேறு சூழல்களில் சுவாமிகளின் அருளால் வியத்தகு அற்புதங்கள் பல நிகழ்ந்துள்ளன.

முப்பத்து நான்கு நூல்களைச் செய்து தமிழுலகில் கற்பனைக் களஞ்சியம் என்னும் அழியாப்புகழ் பெற்ற சுவாமிகள் இறுதியில் நல்லாற்றூரில் தங்கியிருந்தபோது அங்கேயே தம் பூத உடலை நீத்து இட்டலிங்க ஐக்கியமானர்கள்,

உ

ஸ்ரீ பாலசித்த குரவே நம :

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க
திருக்கயிலாயபரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
பத்தொன்பதாம் பட்டம்
அருள்மிகு குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்கள்

ஆசியுரை

சோணசைலமாலை, நால்வர் நான்மணி மாலை, நன்னெறி என்னும் இம்மூன்று நூல்களும் சிவாநுபூதிச் செல்வராய ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றியருளப் பெற்றனவாம்.

சோணசைல மாலை என்பது, சிவந்த அக்கினி மலை வடிவினனாம் அண்ணாமலை அண்ணலுக்குப்பாக்களாலாய மாலை எனப் பொருள்படும். இஃது திருவண்ணாமலையில் அருளப்பெற்றதாகும். பாடல்களின் முன்னீரடிகளில் நூலாசிரியரின் வேண்டுதலும், பின்னீரடிகளில் அம்மலை பற்றிய கற்பனை, அணிநலன்கள் ஆகியனவும் அமைந்து கற்போர்க்குக் கழிபேருவகை நல்குவதுடன் சிவபக்தியைத் தோற்றுவிப்பதாகவும் இந்நூல் அமைகிறது.

நால்வர் நான்மணி மாலை என்பது சைவசமயக் குரவராம் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்க

வாசகர் ஆகிய நால்வர் மீதும் அளப்பரிய விருப்புடன் முறையே வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம், அகவல் ஆகிய யாப்புகளில் கற்பனை பொதுள இயற்றப் பெற்ற நாற்பது பாக்களாலாய பக்திப் பனுவலாகும்.

நன்னெறி என்னும் நூல் பொம்மபுரத்தில் இயற்றியருளப் பெற்றது. இதன்கண் நாற்பது பாக்களில் மக்கட்கு இன்றியமையாத நீதிகள் அழகிய உவமைகளுடன் கூறப் பெற்றுள்ளன. இந்நூல்களைக் கற்போர் நம் ஆதீனப் புலவர் கற்பனைக் களஞ்சியம்ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் தமிழ்ச்சுவை நிரம்பிய செய்யுட்களில் விளைந்த கவி இன்பத்தை நுகர்வதுடன் அவை மொழியும் அரும் பொருள்களையும் உணர்ந்து பயன் பெறுவார்களாக.

உ

உள்ளே

உ

ஸ்ரீ பாலசித்த குரவே நம :

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க

நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள்

இயற்றியருளிய

சோண சைல மாலை

உ

கணபதி துணை.

சோண சைல மாலை

காப்பு

நேரிசை வெண்பா

சதுரனெழிற் சோண சைலற் றுதிப்பன்
மதுரமொழி யன்பர் மனமாங்—குதிரைதிறை
கொண்டவனென் றேத்துங் குரைகழற்கால் யானை திறை
கொண்டவனை யென்னுளத்தே கொண்டு.

நூல்

எழுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்

அண்ணன்மா புகழ்மூ வரும்புனை யரும்பா
வன்றியென் கவியுநின் றனக்காம்
பண்ணுலா மிருவ ரிசைகொணின் செவியிற்
பாணிமா னொலியுமேற் றிலையோ
விண்ணுலா முடியின் மேருவின் வடபால்
வெயிலொரு புடையுற வொருபாற்
றண்ணிலா வெறிப்ப வளர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 1

துவக்கற வறிந்து பிறக்குமா ரூருந்
துயர்ந்திடா தடைந்துகாண் மன்று
முவப்புட னிலைத்து மரிக்குமோர் பதியு
மொக்குமோ நினைக்குநின் னகரைப்
பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கல நடத்த வுயர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 2

நீங்கருந் துயர்செய் வளிமுதன் மூன்ற
னிலையுளே னைவதுரந் திடுமுன்
வாங்கிநின் றனிவீட் டுறைகுவான் விரும்பி
வந்தன னின்குறிப் பறியே
னாங்குறை மதியே தாங்கியென் றுலக
மறைகுறை யறநிறை மதியுந்
தாங்கிய முடியோ டோங்கிய சோண
சைலனே கைலைநா யகனே. 3

கனிமலை துவர்வாய்க் கோதையர்க் குருகுங்
கன்மனக் கொடியனுக் கென்னீ
துனிமலை பிறவி தவிர்த்தனை யெனநிற்
சுளிபவ ரிலையெனக் கிரங்காய்
பனிமலை கதிர்வந் துறநிலை யாடி
பயின்றபீ டிகையென வுதயத்
தனிமலை யிருப்ப வளர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 4

சுடரிலை நெடுவேற் கருங்கணார்க் குருகித்
துயர்ந்துநின் றலமரு மனநின்
னடனவில் சரண பங்கய நினைந்து
நைந்துநைந் துருகுநா ளுளதோ
மடலவிழ் மரைமாட் டெகினென வருகு
மதியுறக் கார்த்திகை விளக்குத்
தடமுடி யிலங்க வளர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 5

அருங்கவி வாத வூரனே முதலோ
ரன்பிலே மென்றது வேண்டி
யிரங்குதல் பொய்ம்மை யன்பிலே னெனயா
னியம்பலே மெய்யெனக் கருளாய்
கருங்கட முமிழு மீங்கவுட் பனைக்கைக்
கரியுரிக் கஞ்சுகங் கடுப்பத்
தரங்கமுண் டெழுகார் முகில்பயில் சோண
சைலனே கைலைநா யகனே. 6

புரத்துறு மவுணக் குழாமும்வண் டிசைகூர்
பூங்கணை மதனுமுன் பெறுநின்
சிரித்தவெண் ணகையு நுதல்விழி நோக்குஞ்
சிறியனே னிருண்மலம் பெறுமோ
கருத்தினுங் கருத வரியநுண் ணியனென்
கடனற வுலகெலாங் காண்பான்
றரித்ததி தூல வடிவுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 7

ஆர்த்தெழு திரைகள் சுருண்டெறி கடனஞ்
சமுதுசெய் பெரும்புகழ்த் தனிமை
தீர்த்திட வுளங்கொண் டவலனேன் றனைநின்
றிருவடிக் கன்பனாக் கிலையே
கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து
கண்டவ ரகத்திரு ளனைத்துஞ்
சாய்த்துநின் றெழுந்து விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 8

தொடையுடைத் திரடோ ணமன்புறத் துடலந்
தொலைக்குமு னகத்துட றொலைத்துத்
தடையறத் திகழ்பே ரறிவுரு வாகத்
தமியனேற் கருளுநா ளுளதோ
புடையினிற் கரிக்கோ டிளம்பிறை புரையப்
பொங்குசோ தியங்கொடி விரித்த
சடையெனப் படர்ந்து கிடந்தொளிர் சோண
சைலனே கைலைநா யகனே. 9

கண்புன றுளிப்ப வழற்படு மிழுதிற்
கரைந்துகு நெஞ்சினின் றனையே
பெண்பயி லுருவ மொடுநினைந் தெனது
பெண்மய லகற்றுநா ளுளதோ
வண்புனல் வேந்த னார்கலிக் குடத்து
மணிமுகிற் கலயத்தின் முகந்து
தண்புன லாட்ட வாடுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 10

வேலையங் துகில்சூழ் மலர்தலை யுலகின்
மெய்யினைப் பொய்யெனு மவர்க்கே
யேலவங் தருள்வ தன்றிமெய் யினைமெய்
யெனுமெனக் கருள்புரிங் திடாயோ
காலநன் குணர்ந்து சினகரம் புகுந்து
காணரி தெனாதுல கனைத்துஞ்
சாலநின் றுழியே கண்டிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 11

மயலினா லழுந்தும் பிறவியா மளற்றை
வளர்தரு நின்பெருங் கருணை
வெயிலினா லுலர்த்தி யெனதுளக் கமலம்
விரிக்குமொண் பரிதிநீ யலையோ
பயிலுமா லயமோர் சைலமோர் சைலம்
பகைப்புல முருக்குகார் முகமோர்
சைலமா துலனா மெனக்கொளுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 12

புலம்புரி துயரங் கழன்றுநின் கழற்கால்
புந்தியஞ் சினகரத் திருத்தி
நலம்புரி புனிதர் பேரவை தமியே
னணிகுவா னருளுநா ளுளதோ
வலம்புரி மனிதர் கடலென வொலித்து
வளைவுற நடுவண்மங் தரம்போற்
றலம்புரி தவத்தி னின்றொளிர் சோண
சைலனே கைலைநா யகனே. 13

நீரினி லெழுமொக் குளிளழி யுடம்பு
நிலையென நிலைக்குமா னந்த
வாரிதி படிய வறிந்திடா துழலு
மடமையே னுய்யுநா ளுளதோ
வேரியல் பதமுன் றேடுமக் கேழ
லின்றுநா டியகிளைத் திடல்போற்
சாரலி னேன மருப்புழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 14

கருத்திடை நினது கருணைமா மேனி
கண்டெழுத் தைந்துநா வியம்பச்
சிரத்தினி லமைத்த கரத்தொடு நினையான்
றினம்வலம் புரியுமா றருளாய்
வரத்திரு முடியின் மதிதிரு முடியின்
வனைங் துகங் தரத்தினி லிருள்கங்
தரத்தினி லிருத்தி விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 15

பாரெலா மிகழு மிகழ்ச்சியும் புகழ்ச்சிப்
பயனென வுணர்ந்துநா டொறுமா
ரூரனா ரவையி னிகழ்ந்தசொற் றுதியி
னுவக்குநின் பதந்தொழ வருளா
யேருலா மண்டச் சுவர்மதின் மிசைப்பா
விலங்குறு மண்டகோ ளகையாச்
சாருமா லயத்தி லிலிங்கமாஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 16

இந்தியங் கரண முடலம்வே றாக்கி
யிருண்மலப் படலமுங் கீறிக்
கந்தமு மலரு மெனநினை யென்னிற்
காண்பறக் காணுநா ளுளதோ
வந்தொரு களிறு முழுவையுங் கொன்ற
மலிபகை தவிர்ப்பவெண் ணிகந்த
தந்தியும் புலியும் வளர்த்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 17

முழங்குவண் டினங்கள் விருந்துணு மலங்கன்
மொய்குழன் மகளிர்தம் மயலாற்
புழுங்குமென் றனைநின் றிருவடி நிழலிற்
புகவிடுத் தளிக்குநா ளுளதோ
வழங்குவெண் டிரையா றவிர்சடை கரப்ப
மணிமுடி நின்றிழிந் திடல்போற்
றழங்குவெள் ளருவி யிழிந்தொளிர் சோண
சைலனே கைலைநா யகனே. 18

குன்றுதோ றாடுங் குமரனே யெனவுங்
கொடுஞ்சிலை மதனவே ளெனவும்
புன்றொழின் மனிதர் புகழ்ந்துபாழ்க் கிறைக்கும்
புலமைதீர்த் தெனக்கருள் புரியா
யொன்றொரு தினந்தோட் குட்குழைந் தனமென்
றுறாதுநா டொறுமக மேரு
தன்றலை தாழ்ப்ப வளர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 19

வெண்டிரு நீறு புனையுமா தவர்க்கு
விருந்துசெய் துறும்பெரு மிடியுங்
கொண்டநல் விரதத் திளைக்கும்யாக் கையுமிக்
கொடியனேற் கருளுநா ளுளதோ
வண்டுழுங் குவளை மலர்தடஞ் சுனையின்
மற்றைறவா னவர்க்குரித் தன்றிச்
சண்டியுண் மகிழ்ந்து கொளமலர் சோண
சைலனே கைலைநா யகனே. 20

வந்துமா மறலி யெனதுயி ருண்பான்
மயிலையுண் சிரலினிற் கின்றான்
முந்திநீ யெனையா னந்தவா ரிதியின்
மூழ்குற விடுத்தருள் புரியாய்
நந்துமா மலையே யென்றுசா திப்ப
நனைமலர் வேங்கையு மசோகுஞ்
சந்துமேன் முளைப்பச் செய்துகொள் சோண
சைலனே கைலைநா யகனே. 21

பூமழை யமரர் பொழியுமா தவர்கட்
புனன்மறு கிடைப்பொடி யடக்கத்
தூமொழி மனைநீ தூதுபோம் பயனில்
சொற்பதர் புடைத்திளைக் கின்றேன்
யாமுணர் மிகுபே ருருவமாய் வரினு
மிருவரு முணர்த்திடி னன்றித்
தாமுணர் கிலரென் றெழுந்துயர் சோண
சைலனே கைலைநா யகனே. 22

கழைமொழிக் கொடியோர்க் கேவல்செய் துடலங்
கமருகு மமிழ்தின் மங் குறாமல்
விழைவறத் துறந்துன் றிருவடிக் கமலம்
விழைகுநர்க் கேவல்செய் திலனே
மழைமதக் களிநல் யானைமத் தகம்பாய்
வள்ளுகி ரோடுசெல் லரிமா
தழைசிறைச சிம்புள் கொண்டெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 23

கார்தரு சுருண்மென் குழற்சிறு நுதற்பூங்
கணைபுரை மதரரிக் கருங்கட்
டார்தரு குவவுக் கொங்கைநுண் மருங்குற்
றையலார் மையலென் றொழிவேன்
சீர்தரு மணியி னணிந்தன வெனக்கட்
செவியுமொண் கேழலின் மருப்புஞ்
சார்தரு முலக விளக்கெனுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 24

நந்துகைத் தலத்து நாரணற் கயற்கு
நவமணிக் கரகநீ ரிருந்து
மைந்துறக் குறித்து மாட்டியுங் காண்பான்
மதித்திடா துனையெதிர்ந் திலரே
யைந்துகைத் தனிக்கோட் டொருபெருங் களிறு
மறுமுகம் படைத்தகே சரியுந்
தந்தெமைப் புரக்குங் கருணைகூர் சோண
சைலனே கைலைநா யகனே. 25

வினையரும் புகலிக் கிறைமணப் பந்தர்
விருந்தினுக் குதவிலேன் முந்திற்
றுனையிரந் திடுவான் வந்தனன் பதநீ
யுதவியென் றுயரொழித் தருளா
யினியபைந் தமிழின் பொதியமால் வரைபோ
லிசைக்குரு காதிம மலையின்
றனையையின் றீஞ்சொற் குருகுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 26

பெண்ணருங் கலமே யமுதமே யெனப்பெண்
பேதையர்ப் புகழ்ந்தவந் திரிவேன்
பண்ணுறுந் தொடர்பிற் பித்தவென் கினுநீ
பயன்றர லறிந்துநிற் புகழேன்
கண்ணுறுங் கவின்கூ ரவயவங் கரந்துங்
கதிர்கணூ றாயிரங் கோடித்
தண்ணிறங் கரவா துயர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 27

உயங்குநூ லிடைப்பூங் கோதைய ரல்கு
லொளிமணிப்பாம்புதீண் டுதலான்
மயங்குவேன் றனக்குன் பதமருந் துதவி
மயக்கமென் றொழித்தருள் புரிவாய்
முயங்குமா புகழ்ப்பூம் புகலியந் தணர்க்கு
முத்துவெண் பந்தரீந் தகல்வான்
றயங்குமீன் முத்துப் பந்தர்வாழ் சோண
சைலனே கைலைநா யகனே. 28

மெய்த்தவ ரடிக்குற் றேவலின் றிறத்தும்
விளங்குமா கமவுணர்ச் சியினும்
புத்தலர் கொடுநிற் பரவுபூ சையினும்
பொழுதுபோக் கெனக்கருள் புரிவாய்
முத்தமு மரவ மணிகளு மெறிந்து
முதிர்தினைப் புனத்தெயின் மடவார்
தத்தைகள் கடியுஞ் சாரலஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 29

பாயும்வெண் டிரைப்பே ராழிசூ ழுலகிற்
பழமொழி யொழியமெய் யடியா
ராயுமென் மலரோர் மலையள வணிய
வமர்ந்தநின் கோலம்யான் மறவேன்
றூயவெண் மதியிற் களங்கமென் றுரைப்பச்
சூழ்பசுங் கொடிபயி லுருவச்
சாயைசென் றுறநின் றிலங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 30

நடமிடு பசும்பொற் புரவிமேற் கொண்டு
நளினமென் மலர்க்கரத் தெறிபூம்
படையொடு துரந்து வந்துமென் விடயப்
பகைப்புலி தனையெறிந் திலையே
யடிநடு நிழல்சென் றெழுகட லடைய
வகல்பெரும் புறத்துவா ரிதியிற்
றடமுடி நிழல்சென் றுறவளர் சோண
சைலனே கைலைநா யகனே. 31

யாவுமா முமையுண் ணாமுலை முலைப்பா
வீந்துபா டச்செயா யெனினு
மேவுமா துயர்செய் சூலைநோ யெனினும்
விடுத்துநிற் பாடுமா றருளா
யோவுமா னலது தொல்லுருக் கொளின்வே
றொன்றெடுத் திடுமென நினைந்து
தாவுமா னினமெண் ணிகந்தசூழ் சோண
சைலனே கைலைநா யகனே. 32

விருப்பொடு வெறுப்பு மகன்றுபே ரின்ப
வெள்ளத்து ளழுந்துநின் னடியார்
திருப்பத மிறைஞ்சி யவர்க்குவே ளாண்மை
செய்பெருஞ் செல்வமே யருளாய்
பொருப்புக டொறும்வீழ் பொங்குவெள் ளருவி
போன்றறி விலர்க்கிடை யறாமற்
றரிப்பருங் கருணை பொழிதருஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 33

பொங்குறு கவினுங் கற்பும்வாய்ந் திலங்கு
புண்ணிய மடந்தையும் பொருளு
மிங்குநன் குதவி யங்குவான் கதியி
னிருத்துநிற் புலவரென் புகழார்
துங்கவெங் குறவர் புனத்திடு பரண்கா
றுணித்துநட் டாரமீ மிசைமா
தங்கவெண் மருப்புப் பரப்புறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 34

போழ்ந்திடு வடுக்கண் மகளிரை யணைத்துப்
புகழ்நந்தி பிரம்படிக் கொதுங்கிச்
சூழ்ந்திடு மமரர் நெருங்குசந் நிதியிற்
றொண்டனேன் வரவருள் புரியாய்
வாழ்ந்திடு மகக்கண் டுருகுதாய் முலைப்பால்
வழிந்தொழு குதலென வடியார்
தாழ்ந்தெழ வருவி யொழுகுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 35

நேர்ந்திடு மொருசெங் கோல்கொடு கொடுங்கோ
னிமிர்ந்திட விலங்கைசென் றடைந்தோன்
கூர்ந்தவன் பொடுநின் றிறைஞ்சுபு வழுத்துங்
குரைகழ லிரக்கவஞ் சுவல்யான்
சேர்ந்திடு மலைமான் பெருமுலை யுவமை
சிறுமலை களுக்குத வாமற்
சார்ந்திட விரும்பி வளர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 36

தெருமரும் பிறவி தமையகன் றிடாத
தேவரைத் தேவரென் றெண்ணி
யருமருந் தனைய நினையடை யாத
வறிவிலா பவப்பிணி யறுமோ
கரிமருங் கணைந்த தெனமுழை வாயிற்
கார்வர விரைந்தெழுந் துகள்கே
சரிமறைந் திருந்து நாணுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 37

ஆண்டுகம் பலசென் றிடவிருந் திடினு
மன்றியோ ரிமைப்பினி றுடல
மாண்டுகு மெனினு நன்றுநின் கமல
மலரடிக் கன்பரா யிருப்பிற்
பூண்டயங் கயில்வேற் குதலையந் தீஞ்சொற்
புதல்வன்மே லிவர்செய லெனமார்த்
தாண்டன்வந் திவர விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 38

விரைவிடை யிவரு நினைப்பிற வாமை
வேண்டுநர் வேண்டுக மதுரம்
பெருகுறு **தமிழ்ச்சொன் மலர்நினக் கணியும்
பிறவியே வேண்டுவன்** றமியே
னிருசுடர் களுமேல் கீழ்வரை பொருந்த
விடையுறன் மணிக்குடக் காவைத்
தரையிடை யிருத்தி நிற்றனேர் சோண
சைலனே கைலைநா யகனே. 39

ஒண்மணிப் பசும்பொற் பூணிள முலையார்க்
குளத்திட மெலாமளித் தடியார்
கண்மணிக் கமையா விருந்துசெய் தருணீ
கணமிருப் பதற்கிடம் புரியேன்
வெண்மணிக் கழைமுன் கரியநெற் றிதழி
வேங்கைபொன் சொரியமா சுணங்க
டண்மணிப் பைக ளவிழ்த்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 40

அருங்கலம் புனையு மகளிரோ ரிருவ
ரணிமணம் புணர்த்திவா ரண்முந்
துரங்கமும் புலவர்க் குதவுநின் றனையே
துதித்திடா துழன் றனன் வறிதே
மருங்குநின் றழகா லத்திதாங் குவபோன்
மரைமலர்ப் பெருஞ்சுனை யொடுபூந்
தரங்கநின் றிலங்க விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 41

ஏணுறு மமரர் கடைகட லளித்த
விருளொடு மணிமிடற் றடியே
னாணவ விருளுங் கலந்திடிற் கருமை
யழகுமிக் கிலங்குறுங் கண்டாய்
மாணெழில் வராக முழுப்புழை யனந்தன்
மணியொளிப் பிழம்பெழல் சிறுதீத்
தாணுவின் முருக னெழுதனேர் சோண
சைலனே கைலைநா யகனே. 42

மின்னவிர் சடிலக் கற்றையு மருள்கூர்
விழிகளுந் திருமுகத் தழகுங்
கன்னவி றிரடோ ணான்குமீ ரடியுங்
கண்டுகண் களிக்குநா ளுளதோ
வின்னிசை யொலிகேட் டுருகுதல் கடுப்ப
விழிதர வருவிகிம் புருடர்
தன்னிக ரிசைகூர் சாரலஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 43

அள்ளிவெண் டிருநீ றுடன்முழு தணியு
மடியவர்ப் பெறினெழுந் திளங்கன்
றுள்ளிநின் றுருகு மன்னையின் மனநெக்
குருகுபு சென்றிறைஞ் சிலனே
யெள்ளிவெம் புலியெண் கரிதிரு மேனி
யேறுத றகாதென வெகுண்டு
தள்ளிவந் தருவி யிழிதனோர் சோண
சைலனே கைலைநா யகனே. 44

இழையெனத் தளர்சிற் றிடையுணா முலையா
ளெனக்குவண் புகலிவேந் தயின்ற
கழுமணிப் பசும்பொற் குலவுபாற் கிண்ணங்
கழுவுநீர் வார்ப்பதற் குரையாய்
முழையிடைக் கதிர்மா மணிவிளக் கேற்றி
முசுக்கலை பிணாவொடு மசோகத்
தழையிடைத் தழுவி யுறங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 45

வினைவழி யுடலிற் கமைந்துறு முணவே
வேண்டினர் வினைகொடு புணரா
நனைமலர் புனைநின் றிருவடி யடைவா
னாடொறும் வேண்டில ருலகர்
கனையிருள் கரந்த விடமறிந் துணப்போங்
காட்சியிற் புனக்கிளித் தொகுதி
தனையெறி மணிகண் முழைபுகுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 46

மாங்குயின் மிழற்று நாவலூர்ப் புலவன்
மறுப்பவு முடிமிசை யிருத்தும்
பூங்கழ லடியேன் றலைமிசை யிருத்தப்
புகலினு மெனகொனீ யிரங்கா
யோங்குறு மண்ட கோளகை யளவு
முயர்ந்துமோர் மழவிடை முதுகிற்
றாங்குபு நடக்க விருந்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 47

ஈரமு மருளு மொழுக்கமுஞ் சால்பு
மின்சொலு மிந்தியப் பகைவெல்
வீரமு மருளி யெனதுவெம் பிறவி
விலக்கியா ட்கொள்ளுநா ளுளதோ
வாரமு மகிலுந் தடிந்துசெம் மணிக
ளரித்தெறிந் தெறுழ்வலிக் குறவர்
சாரலி னிறுங்கு விதைக்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 48

தொகைமிகு மமரர் முனிவரர் பரவித்
தொழுதகை யொடுவிரை கமழ்பூம்
புகைமிகு மணிமண் டபத்திடை நெருங்கப்
புழுகுநீ யணிதல்கண் டுவந்தேன்
குகைமிகு வாயிற் சோதிமா மரஞ்சேர்
குளிர்மதி விழுங்கவாய் வைத்த
தகைமிகு மூரற் றிரளநேர் சோண
சைலனே கைலைநா யகனே. 49

சினம்படு முளங்கொண் டிவர்களை யெனையுஞ்
சேர்ப்பது தகுமுனக் கிசைவண்
டினம்படு மலரி னகவித ழொடுபுல்
விதழுமொன் றுதலுல குடைத்தே
மனம்படு மடிமை யுளன்சிலை யெறிக்கு
மனங்குழைந் துமையவள் களபத்
தனம்பட வடிவங் குழைந்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 50

வாம்பரி கரிதேர் சிவிகைபொற் குவியன்
மணிப்பணி பெரும்புவி யாட்சி
யாம்பரி சலவென் றுன்பத மருவி
னன்றியென் கவிகளொன் கவிகள்
காம்பரி முரண்மும் மதகரி வளைத்த
கைவிட மோதலாற் கதிர்த்தேர்த்
தாம்பரி துணிக்கென் றீர்த்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 51

துன்னுறு துயரப் பிறவிவெங் கொடுநோய்
தொலைப்பினுந் தொலைத்திடா துறினு
நின்னடி மலரை யன்றியான் மறந்து
நினைப்பனோ விறக்கும் வானவரை
மன்னளி பருக வுடைவிறான் மதுவும்
வாரண மதமும்வெள் ளருவி
தன்னொடு மிகவி யொழுகுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 52

நீரினா லழலால் வருங்கொடும் பிணியா
னிருதரா லலகையால் விலங்காற்
சோரரால் வருந்து மவரலர் நினது
தூயநா மம்புகன் றிடுவார்
சீருலா மணியா லரிபர வுதலாற்
றிசையுற நீள்கையா லெழின்மை
சார்தலா லுமையாள் விழிநிகர் சோண
சைலனே கைலைநா யகனே. 53

முகவிளக் கென்ன மணிக்குழை மிளிர
முலைமுகட் டணிபெற மலராள்
பகல்விளக் கென்ன வொளிகெட வரும்பொற்
பாவையர்க் கிரங்கிடா தருளா
யகவிளக் கென்ன வகறிரி நெய்தீ
யாக்குவோ ரின்றியே யெழுந்த
சகவிளக் கென்ன விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 54

நீலியோ டுனைநா டொறுமருச் சித்து
நின்றொழில் புரிந்திட வுடற்குக்
கூலியோ தனமென் றளிப்பவர்க் கன்றிக்
கூற்றினைக் கடக்குமா றெளிதோ
மாலியோ சனையின் வணங்குறுங் கைலை
மலைநிவே தித்திடக் குவித்த
சாலியோ தனமென் றிடத்திகழ் சோண
சைலனே கைலைநா யகனே. 55

தோற்றிடும் பிறவி யெனுங்கடல் வீழ்ந்து
துயர்ப்பிணி யெனுமலை யலைப்பக்
கூற்றெனு முதலை விழுங்குமுன் னினது
குரைகழற் கரைபுக விடுப்பா
யேற்றிடும் விளக்கின் வேறுபட் டகத்தி
னிருளெலாந் தன்பெய ரொருகாற்
சாற்றினு மொழிக்கும் விளக்கெனுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 56

கந்தர மிருந்து மடகுநீ ரயின்றுங்
கரநிலத் தமைத்திரு பதமு
மந்தர நிமிர்த்து நின்னிலை யறியா
ரரும்பவ மொழியுமோ வுரையா
யிந்திரன் வனத்து மல்லிகை மலரி
னிண்டைசாத் தியதென நிறைந்த
சந்திரன் முடிமேல் வந்துறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 57

கூம்புறு கரமு மலர்ந்திடு முகமுங்
கொண்டுநின் றனைவலம் புரிவோர்
மேம்படு சரண மலர்ப்பொடி மேனி
மேற்படிற் பவம்பொடி படுமே
பூம்பொழிற் புகலிக் கிறைவனா னிலஞ்சேர்
புண்ணியத் தலங்களி னடைத்து
தாம்புனை பதிகந் தொறும்புகழ் சோண
சைலனே கைலைநா யகனே. 58

கானமே மருவும் விலங்கினுங் கடையேன்
கற்பவை கற்றிலேன் விடய
ஞானமே யுடையே னறிஞரைக் காணி
னாணிலே னுய்யுநா ளுளதோ
வானமே யளவு நெடுங்கிரி மலய
வாதமோ துறுபவர் கட்குத்
தானமே யுதவ வளர்ந்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 59

விழைவொடு மறஞ்செய் துய்கவென் றுரைக்கும்
விதியினைக் கவளமுண் கெனவும்
கழைசுளி நெடுநல் யானையின முனிந்து
கடக்குமென் பவமொழிந் திடுமோ
மழைமுகில் வந்து தவழ்ந்துவிண் படரு
மலிதரு புகையென வெழுந்து
தழலுரு வுண்மை விளக்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 60

வாத்திய முழங்கச் சிவிகையுங் கரியு
மாறியூர்ந் துலவிவாழ்ந் தவரு
மேத்திய மொழியோ டிரக்கையா ளின்குற்
றேவலே வாழ்வென வறிந்தேன்
பாத்திய மணிகள் கொண்டிழைத் திலங்கும்
பாரவா சிகைமணி மேகஞ்
சாத்திய தெனவில் வளைந்துறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 61

குலத்தினிற் பிறந்து மலகினூல் கற்றுங்
குணத்தினிற் சிறந்துநல் விரத
பலத்தினிற் கவர்ந்து நின்னடி யவர்க்குப்
பரிவிலார் கதியிலா தவரே
கலத்தினிற் பொலிந்த விமயமீன் றெடுத்த
கன்னிநுண் ணிடைமிசைக் களபா
சலத்தினிற் குறுதி கொடுத்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 62

மூடக விருளோ டுன்னையின் றுண்ணா
முலையர சாலகற் றுவலென்
சூடரு மொழியா லடைந்தனன் றமியேன்
சூள்வழு வாதுநீ யருளாய்
வீடுறுங் கவரி கீழ்விழ வுறல்கார்
மிசையனம் பன்றிதா மாறித்
தாடலை துருவ வடைதனோர் சோண
சைலனே கைலைநா யகனே. 63

ஐயநுண் மருங்குன் மாதர்மேல் வைத்த
வாதர வுன்பதாம் புயத்து
மெய்யுறு நறுமென் கலவையின் விருப்பு
வெண்டிரு நீற்றினும் வருமோ
கொய்யுறு தினைவீழ்ந் திடுபசுங் கிள்ளைக்
குழுக்கடோ ரணமென வெழுந்து
தையலர் கடியப் பறந்துறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 64

கனலினூ டமைத்த விழுதென வுருகக்
கற்றதன் றுள்ளமென் கரங்கள்
புனலுமாய் மலருங் கொடுநினைப் பூசை
புரிந்தில வென்செய்கோ வுரையாய்
சினவுநோய் மருந்து வேறுகொண் டிருக்குஞ்
சிலம்புக ணாணவுட் கொள்வோர்
சனனநோய் மருந்தா யெழுந்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 65

ஊழுறு மணிப்பொற் கோயில்போய் வாவ
லுறக்கொடுத் தாங்குநிற் புணர்த்தாப்
பாழுறு மனம்பே ரவாக்குடி யிருப்பப்
பண்ணுமென் கண்ணுநண் ணுவையோ
வீழுறு மெயினர் கிழங்ககழ் குழியும்
வேழம்வீழ் குழிகளு நிரம்பத்
தாழுறு மருவி பொன்சொரி சோண
சைலனே கைலைநா யகனே. 66

பைம்மறிப் படுப்பி னுள்ளறி யாமற்
பணிநறுந் துகில்புனை மடவார்
மெய்ம்மிசைக் கருந்தோல் கண்டுவந் துழலும்
வினையினே னுய்யுநா ளுளதோ
செம்மலர்ப் பதம்பா தலங்கடந் திடவான்
றிருமுடி கடப்பினு மூவர்
தம்மியற் செப்பி னடங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 67

செக்குறு திலத்தின் வருந்துபு பிறக்குஞ்
செல்லலு நாடியின் பிணிப்பு
நெக்குற வறிவு கலங்குசாக் காடு
நினைதொறு முளம்பதைக் கின்றேன்
மொய்க்குறு முகில்கண் டரிகரி யென்னு
முழக்கமு மரகர வென்னுந்
தக்கவர் முழக்கு மெதிரெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 68

மரணமும் பிறவித் துயருநீங் குறநூல்
வாய்ச்சிலம் பிக்கருள் புரிந்த
கருணியென் றுனைவந் தடைந்தன னினிநின்
கருத்தினை யின்னதென் றறியேன்
முரணிபம் பருஉக்கை தலைமிசை யெடுப்ப
முழைக்கரும் பாம்பென மணித்தேர்த்
தரணியுள் வெருவி யகன்றிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 69

அங்கையின் வைத்த கூர்ங்கனன் மழுவா
லருவினைக் காடற வெறிந்து
மங்கலில் பத்தி வித்திட வடியேன்
மனத்தினைத் திருத்துநா ளுளதோ
பொங்குறு செக்கர் கருவிசும் புறவேள்
புரத்தெரி கதுவிட நோக்கித்
தங்குத லொப்ப நின்றிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 70

சுருக்குமைம் புலனும் விரிக்குமூ தறிவுந்
துன்னுநல் லினமுநீத் தகன்றே
யிருக்கும் வெங்கயவ ரினமுமென் றருளி
யென்னைநின் னடிமைசெய் தருள்வாய்
முருக்குமங் குதமா மணியுமிழ்ந் தகன்ற
முழைதழற் றெனவுளம் வெருவித்
தருக்குமொண் புலிசென் றுறமருள் சோண
சைலனே கைலைநா யகனே. 71

அந்தரி குமரி யஞ்சலி கௌரி
யம்பிகை மனோன்மனி மதங்கி
சுந்தரி யுமையுண் ணாமுலை யெனநின்
றுணைவியை வாழ்த்துமா றருளாய்
வந்தரி சுருதி மருங்கினிற் பாட
வயங்குதும் புருவுநா ரதனுந்
தந்திரி யிசையாழ் பாடுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 72

நீக்குறு மயலு நிலைத்தபே ரறிவு
நின்றிரு வடிமலர்க் கன்பு
காக்குறு மனமு முடையமெய்த் தொண்டர்
கணத்தினு ளெனைவிடுத் தருளாய்
தேக்குறு மிறாலிற் கன்னல்காட் டுவபோற்
றென்றல்வந் தசைதொறு மெல்லத்
தாக்குறு காந்த டுடுப்பலர் சோண
சைலனே கைலைநா யகனே. 73

பவமிலே மினியா மென்றிறு மாந்து
பயமற விருந்திடப் பத்தி
நவமிலே மடியே மென்செய்வா னிருந்து
நாளினை வறிதொழிக் கின்றே
மவமிலே மிமையா விழியினாற் காண்கை
யால்வலங் கொளவடி நிலந்தோய்
தவமிலே மெனவான் சுரர்தொழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 74

கண்கணிற் பரிந்து கண்டுவப் பனவே
கைகணிற் றொழுபவே செவிகள்
பண்கவிற் புகழும் புகழ்ச்சிகேட் பனவே
பதநினை வலம்புரி வனவே
யெண்குபுற் றிடப்ப வெழுமணி கரவா
விருந்துசென் றிருள்கவர் வனபோற்
றண்கதிர்க் கற்றை கான்றிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 75

நிணந்திகழ் வடிவேற் காளையே யென்று
நேரிழை யவர்விழைந் திடுவோர்
குணந்திரி தளிரின் மடியவே கண்டுங்
கொடியனேன் வாழ்வுவந் திருந்தேன்
மணந்திமிர் மகளிர் சிலம்பொடு மைந்தர்
வார்கழ றுவக்கிட வலம்போய்த்
தணந்திடு மமயத் தறிந்துநாண் சோண
சைலனே கைலைநா யகனே. 76

மாந்தளிர் கவற்று மணிச்சிலம் படிகள்
வடுவகிர் டொருவும்வா ணெடுங்கண்
காந்தளி னிமைக்கு மங்கையென் றவலக்
கன்னியர்ப் புகழ்வினை யறுமோ
பூந்திரை சுருட்டுங் கடல்கடை குநரொண்
பொறியா வின்றிமா தவர்க்குச்
சாந்துய ரகற்று மருந்தருள் சோண
சைலனே கைலைநா யகனே. 77

சிந்தனை கலங்கி யிணைவிழி யிருண்டு
செவிகளுஞ் செவிடுபட் டைம்மே
லுத்திட வுயிர்போம் பொழுதுநின் வடிவ
முளங்கொளும் பரிசெனக் கருளாய்
மந்தர சைலந் தருவிடங் களத்து
வைத்திடத் தினிலிம சைலந்
தந்திடு மமுதை வைத்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 78

நயங்கொளு மலரா னின்றிரு வடியை
நாடொறு முயிருணுங் கூற்றம்
பயங்கொள வகலா தருச்சனை புரிந்து
பரகதி யடையுநா ளுளதோ
வயங்கொளும் விடயப்பெரும்பகை கடந்து
வானநா டாண்டிட மதிப்போர்
சயங்கொள் வடைதற் கரணமாஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 79

பிரம்பொரு கரங்கொண் டடிப்பநந் தீசர்
பெருங்கல்வீழ் பாசியி னிமையோர்
சிரம்பொர வொதுங்கி நெருங்குநின் னவையிற்
றீயனே னணையுநா ளுளதோ
வரம்பொர வகன்ற விலங்கிலை நெடுவே
லமர்த்தகட் கிரிமக ளிணைக்குஞ்
சரம்பொர விருந்து விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 80

காமரை முனிந்த முனிவரர் புகுமெய்க்
கதியிடைப் புகவிடுத் திடினும்
பாமர னிவனென் றிருளினுய்ப் பினுநின்
பதமல ரன்றிவே றுளதோ
வாமரை பொருந்து முலகுள குவட்டு
மலைகள்போ லாதுணா முலையாந்
தாமரை பொருந்து மானுள்வாழ் சோண
சைலனே கைலைநா யகனே. 81

தொடுக்குமா கமங்க ளெலாஞ்சொலைந் தெழுத்துந்
துணிந்தநெஞ் சிருக்கையாற் பகையைப்
படைக்கைதா னிருந்து மஞ்சுறு மவர்போற்
பகட்டுமா மறலியை வெருவேன்
மடக்குவார் கலாப மயிறுயி லெழுந்து
மருவலர் வேங்கைமீ தகவத்
தடக்கைவா ரணங்கள் பிளிறிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 82

நிந்தியா துடல முழுதுநீ றணிய
நேசியா தமலவைந் தெழுத்துஞ்
சிந்தியா துழலு மெனைக்கொடுங் கூற்றென்
செய்யுமோ வறிந்திலேன் றமியேன்
வந்தியா வரவ மன்றிடைக் கண்ட
மலர்சிலம் படியையமண் ணுணிபோய்ச்
சந்தியா தயர வொளித்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 83

மங்கையர் பாரக் கொங்கையங் குவட்டு
மதர்விழிக் கடலினு மளகக்
கங்குலி னூடுஞ் சென்றவென் மனத்தைக்
கதியிடை நடத்துமா றெளிதோ
செங்கதிர் காலை மாலையுந் தங்கச்
சிலம்புள வெனக்கடும் பகலிற்
றங்குற நீடி நின்றிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 84

கண்டிகைக் கலனே கலனென விழைந்து
காயமே லணிந்துவெண் ணீற்றுப்
புரண்டரக் குறிசேர் நுதலொடு நினையான்
பூசனை புரியுமா றருளாய்
முண்டகச் செழும்பூ வெனவிளக் கெரியு
முடிமிசை முத்துமேற் கட்டித்
தண்டிரைக் கங்கை யாறுசேர் சோண
சைலனே கைலைநா யகனே. 85

நாவினைந் தெழுத்து மந்திர மலாத
நவிற்றுவோர் தமையுநீ யிருப்பப்
பாவினங் கொடுபுன் மனிதரைப் புகழும்
பாமரர் தமையுமென் றொழிவேன்
கோவினம் புரப்பக் குன்றமன் றெடுத்த
குன்றமம் பாடகக் குன்றந்
தாவினஞ் சிலையென் றெடுத்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 86

திங்களுங் கதிரு மிலங்கிய மானுந்
திகழ்பெரும் பூதமோ ரைந்துங்
கங்குலும் பகலுங் கடந்தநின் வடிவங்
கண்டுகண் களிக்குநா ளுளதோ
பொங்குகுங் குலியக் கலயவா ரழலிற்
புகையெனச் சரோருக வல்லி
தங்குவண் டெழுபூம் பொய்கைசூழ் சோண
சைலனே கைலைநா யகனே. 87

பொறியெனப் புலன்க ளெனக்கர ணங்கள்
பூதங்க ளெனவிலா தடங்க
வறிவெனத் தமியேற் கொருமொழி யுதவி
யருவினைக் குறும்பற வெறியாய்
செறிமுலைக் கரியுஞ் சிற்றிடை யரியுஞ்
சேரமா துமைதினங் கட்டுந்
தறியெனக் கவின்பெற் றிலங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 88

பொன்னிடத் தடைந்த மணியென வடைந்து
புண்ணியர்க் கருளுநின் பதங்க
ளென்னிடத் திரும்பி னடைந்தசெம் மணிபோ
லெய்திய தம்மவோ வியப்பே
மன்னிடக் கடலு ளடங்கும்வெற் பன்றி
மலைதரு மருட்பெருங் கடலைத்
தன்னிடத் தடக்கு மலையெனுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 89

நீங்கிய நேயத் தவர்க்கறி வரிய
நெடியவ னெஞ்சகன் றிடாத
தேங்கிய சோதி மன்றுளா டுவவென்
சிந்தையு ணடப்பநின் பதங்க
ளோங்கிய மூங்கிற் றலைமிசை மலர்வீழ்ந்
துழுமணி புரியிறான் மருவித்
தாங்கிய வால வட்டநேர் சோண
சைலனே கைலைநா யகனே. 90

எழுபசும் புல்லும் புனலுமெவ் விடத்து
மிருந்திட நினைத்தவவ் விடத்தே
யிழையொடு வந்து தோன்றுநீ யிருப்ப
வீணின்மா னிடர்பிறந் துழல்வார்
மொழிதரு கருணை மலையெனும் பெயரன்
மொழியொரீஇ வேற்றுமைத் தொகையைத்
தழுவுற நின்று வளர்ந்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 91

வேணவா வகன்று நின்றிரு வடியின்
மெய்ம்மையன் படைந்துபொய்ப் பிறவி
நாணுவா ரினங்கண் டுறும்படி தூய
ஞானநாட் டம்பெற வருளாய்
சேணுலா மதியந் தவழ்பெருங் குடுமிச்
சிலம்புகள் சிறுதுரும் பாகத்
தாணுவா யெழுந்து வளர்ந்திடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 92

நின்னையே நோக்கி விடாதகட் புலனு
நின்னையே நினைக்குநெஞ் சகமு
நின்னையே துதிக்கு நாவுமென் றருளி
நின்றிரு வடியின்வைத் தருள்வாய்
தன்னையே றினர்க்குச் சகமெலாங் காட்டுந்
தரணியோ டிகலிமே வினர்க்குத்
தன்னையே காட்டு மலையெனுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 93

மின்வணங் கவருஞ் செஞ்சடா டவியும்
விளங்கொளி மார்பும்வா னுலக
மன்வணங் குறுநின் பதாம்புய மலரு
மனங்குடி யிருக்குநா ளுளதோ
பொன்வணம் புரியுங் காகமொன் றினைப்பொற்
பொருப்பென வடைபொரு ளனைத்தும்
தன்வணம் புரியும் பொருப்பெனுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 94

குருமணி மகுடம் புனைந்துல காளுங்
கொற்றவ ராதலி னென்கட்
கருமணியெனுநின் றொண்டர்குற் றேவல்
கருதியாட் பட்டிட லினிதே
பெருமணி விசும்பி னுச்சியி னெழுந்த
பிள்ளையங் கதிரென வரவந்
தருமணி யொளிவெண் மதியுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 95

சிம்புளாய் மடங்க லெறுழ்வலி கவர்ந்த
திறலுமுப் புரஞ்சுடு விறலு
மம்புயா தனத்தன் முடிகளைந் திட்ட
வடலுமேத் தினர்க்கிட ருளதோ
வும்பர்மா மதியி லங்கையி லிருந்த
வுழைகுதித் திருப்பவா ரழல்வான்
றம்பமா யெழுந்து நின்றிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 96

அஞ்சலென் றவலக் கொடியனேன் றனைநின்
னடியரிற் கூட்டுக வுலகி
னஞ்சமுண் டிருண்ட கண்டமென் றுனது
நற்கள மிகழ்பவ ருளரோ
வஞ்சமைங் கரன்கொண் டிளவலோ டிகலி
வலங்கொள்வா தின்னும்வந் துறினுந்
தஞ்சமென் றிடாது நின்றிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 97

அணிந்திடு கலனுஞ் சாந்துமொண் டுகிலு
மரிவையர் போகமும் பெறுவான்
றுணிந்திடு மனமென் றுனைப்பொரு ளாகத்
துணியுமோ வறிந்திலேன் றமியேன்
பணிந்திடு மயன்மால் பெருமைக ளனைத்தும்
பறவைகொண் டெழுதலாய் முடிந்து
தணிந்திட நிமிர்ந்து நின்றிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 98

பூவுறு தடமு மதியுறு விசும்பும்
பூணுறு முறுப்புநின் றுலகாள்
கோவுறு நகரு மென்னவென் மனநின்
குரைகழன் மருவுநா ளுளதோ
வோவுறு மனைசெய் பவர்கொள மரந்தாங்
கோங்கல்க ணாணவுன் னினர்க்குத்
தாவுறு முயர்வீ டளித்தருள் சோண
சைலனே கைலைநா யகனே. 99

சீரணி புகழுங் கல்வியுஞ் சிறந்த
செல்வமு மில்லில்வாழ் பவர்க்குப்
பேரணி கலமென் புதல்வருங் கதியும்
பெறத்துதிப் பவர்க்கருள் பவனீ
நேரணி கதியை மறந்தவர் கண்டு
நினைந்துற மிக்கபே ரருளாற்
றாரணி முழுதுந் தோன்றிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 100

சோண சைல மாலை முற்றிற்று.

உ

ஸ்ரீ பாலசித்த குரவே நம :

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க

நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

இயற்றியருளிய

நால்வர் நான்மணி மாலை

உ

கணபதி துணை

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க

சைவ சமயாசாரியர்களாகிய

நால்வர் நான்மணிமாலை

காப்பு

எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

நேரிசை வெண்பா

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்த**பிரான்** றண்டை
வெறித்தண் கமலமே வீடு. 1

கட்டளைக் கலித்துறை

வீட்டிற்கு வாயி லெனுந்தொடை சாத்து**சொல் வேந்த**
பொது
வாட்டிற்கு வல்ல னொருவற்கு ஞான வமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமுன் னல்கினுமென்
பாட்டிற்கு நீயு மவனுமொப் பீரெப் படியினுமே. 2

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

படியிலா நின்பாட்டி **லாரூர**
னனிவிருப்பன் பரம னென்ப
தடியனே னறிந்தனன்வான் றொழுமீச
னினைத்தடுத்தாட் கொண்டு மன்றித்
தொடியுலா மென்கைமட மாதர்பா
னினக்காகத் தூது சென்று
மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு
முழன்றமையால் விளங்கு மாறே. 3

நேரிசை யாசிரியப்பா

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணன்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே. 4

நேரிசை வெண்பா

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின்—னிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
விங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு. 5

கட்டளைக் கலித்துறை

எனக்கன்பு நின்பொருட் டெய்தாத
தென்கொல்வெள் ளேறுடையான்
றனக்கன்பு செய்திருத் தாண்டக
வேந்தவித் தாரணியி
னினக்கன்பு செய்கின்ற வப்பூதி
யைச்சிவ நேசமுறு
மினர்க்கன்பு செய்நம்பி யாரூர
னேத்து மியல்பறிந்தே, 6

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

அறிந்து செல்வ முடையானா மளகைப்
பதியாற் றோழமை கொண்
டுறழ்ந்த கல்வி யுடையானு
மொருவன் வேண்டு மெனவிருந்து
துறந்த முனிவர் தொழுப் **பரவை**
துணைவா நினைத்தோ ழமைகொண்டான்
சிறந்த வறிவு வடிவமாய்த்
திகழு நுதற்கட் பெருமானே. 7

நேரிசையாசிரியப்பா

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய **புனிதன்** மொழிந்**தவா சகமே**
வாசக மதற்கு **வாச்சியந்**
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே. 8

நேரிசை வெண்பா

இருகாட்டுண் மாத ரெலும்பிற் புரண்மால்
சுடுகாட்டு ளாடுவார் சுட்டி—னொடுகாட்டுஞ்
சம்பந்தா வென்புநின்பாற் றந்தாக்கிக் கொண்டிலனென்
கும்பந்தா மென்னுமுலைக் கொம்பு. 9

கட்டளைக் கலித்துறை

கொள்ளைக் கதிர்முத்தின் பந்தருஞ் சின்னமுங்
கொள்ளுமொரு
பிள்ளைக் கதுதகு **நாவர சாய பெருந்தகையோய்**
கள்ளைக் குவளை யுமிழ்வீ ழியிற்படிக் காசொன்று நீ
வள்ளைக் குழையுமை பங்காளர் கையிலென்
வாங்கினையே. 10

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வாங்குசிலை புரையுமுட லெனுங்குளத்தின் மூல
மலமெனுமோர் வெங்கரவின் பகுவாயி னின்றுந்
தீங்கிலுயி ரெனும்பனவக் குலமகனை யாதி
திரோதாயி யென்னுமொரு வெந்திறற்கூற்றுவன
லோங்குறுநா தாந்தமெனப் பெயரியவக் கரையி
லுமிழ் வித்துச் சிவமெனுமோர் தந்தையொடுங் கூட்டாய்
கோங்கமுகை கவற்றுமிள முலைப்பரவை மகிழக்
குண்டையூர் நென்மலைமுற் கொண்டவருட் கடலே. 11

நேரிசையாசிரியப்பா

கடனிற வண்ணன் கண்ணோன் றிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதிநா யகற்கு
முடிவிளக் கெரித்துங் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்து
மருமக னறும்பூங் கருமயி ருதவியு
நென்முளை வாரி யின்னமு தருத்தியுங்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்து
மகப்படு மணிமீ னரற்கென விடுத்தும்
பூட்டி யரிவா ளூட்டி யரிந்துந்
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியு
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்துந்
தந்தையைத் தடிந்து மைந்தனைக் கொன்றுங்
குற்றஞ் செய்த சுற்றம் களைந்தும்

பூக்கொளு மாதர் மூக்கினை யரிந்து
மிளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநா ளொருசிலர் தொண்ட ராயினர்
செங்கண்மா றடக்கையிற் சங்க நாண
முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்து
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டு
நின்னைத் தொண்ட னென்னக் கொண்டன
னிருக்கு மடுக்க லரக்க னெடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமக டழுவ மனமகிழ் வோனே. 12

நேரிசை வெண்பா

மகிழ்ச்சி மிகவுண்டு போலுமெதிர் வந்து
புகழ்ச்சியொடு நீபாடும் போது—நெகிழ்ச்சிமலர்ச்
சந்தையினும் வண்டிரையுந் தண்புகலிச் சம்பந்தா
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு. 13

கட்டளைக் கலித்துறை

தாயிலி யாகுஞ் சிவபெரு மான்றனைத் தானெனுமோர்
கோயிலி னாரறி வாகிய நாமமுன் கொண்டிருந்த
வாயிலி னாணவ மாகுங் கபாடமு மன்றிறந்து
நோயிலி யாகிய சொல்லிறை காட்டுவ னோக்குதற்கே.
14

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

நோக்குறு நுதலோ னின்னிடை விருப்பா
    னூற்பக வன்னநுண் மருங்குல்
வார்க்குவி முலைமென் மகளிர்தம் புலவி
    மாற்றுவான் சென்றன னென்றாற்
கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக்
    கொண்டதே துக்குநீ புகலாய்
காக்கரு மதலை விழுங்கிய முதலை
    கான்றிடத் தோன்றுநா **வலனே.** 15

நேரிசையாசிரியப்பா

வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடன்
முகந்துல குவப்ப வுகந்த**மா ணிக்க**
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
யோதுவார் **மன**மெனு மொண்குவம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனு நிலம்புக வூன்றிய **வன்பாம்**
வித்திற் **சிவ**மெனு மென்முளை தோன்றி
வளர்ந்து **கருணை** மலர்ந்து
விளங்குறு **முத்தி**மெய்ப்பயன் றருமே. 16

நேரிசை வெண்பா

பயனாகு நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயிலாகு நோய்க்கு மருந்தா—முயிராகுஞ்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன் **சம்**
பந்த னியம்புதிருப் பாட்டு. 17

கட்டளைக் கலித்துறை

பாட்டான மறைபுக ழும்பிறை சூடியைப் பாடிமகி
ழூட்டா மகிழ்சொல் லிறைவனைப் பாடி யுவப்புறுக்க
வேட்டான் மலிபெருங் கல்லவன் போல மிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற் கேவிழப் போதுவனே. 18

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

போத முண்ட பிள்ளை யென்பு பொருகண் மாது
செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர் கன்மி தப்ப
வுய்த்ததோ
வாய்தி றந்து முதலை கக்க மகனை நீய ழைத்ததோ
யாது நம்பி யரிது நன்றெ னக்கி யம்ப வேண்டுமே. 19

நேரிசையாசிரியப்பா

வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கு
மருள்செய் சிவனே யலந்தே னந்தோ
முறையோ முறையோ விறையோ னேயென்
றழுது செம்பொ னம்பலக் கூத்த
னருளாற் பெற்ற வன்பினி லொருசிறி
தடிய னேற்கு மருளல் வேண்டு
நீயே கோட னின்னருட் பெருக்கிற்
கேற்ற தன்றிள வேறுகந் தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக
திருந்திய வேத சிரப்பொருண் முழுதும்
பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நீழலிற் கொள்ளைகொள் வோயே. 20

நேரிசை வெண்பா

கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளுந் **திருஞான சம்பந்தா**—வெள்ளமிடு
மேடேறப் பால்குறைந்த தென்றழுவ ரேகழுவின்
காடேறப் புக்கவரு கர். 21

கட்டளைக் கலித்துறை

அருகக் கடல்கடந் தேறிய தோசிலை யம்பியெனப்
பெருகக் கடல்கடந் தேறிய தோசொல் பெருமிடறு
கருகக் கடல்விட முண்டோ னடியிற் கசிந்துமன
முருகக் கடலன்பு பெற்ற **சொல் வேந்த**வுனக்கரிதே. 22

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

உனற்க ரும்புகழ் மேவிய சுந்தர னும்பன் மீதிவரா
நினைப்ப ருங்கயி லாயம டைந்தமை நின்று
காண்குறவே
யெனக்கு வந்துறு மோமக வென்றழு கின்ற நாளலைபா
றனித்த ருந்துபு மாலை யுமிழ்ந்திடு **தம்பி ரா**னலனே. 23

நேரிசையாசிரியப்பா

நலமலி வாதவூர் நல்லிசைப் **புலவ**
மனநின் றுருக்கு மதுர **வாசக**
கலங்குறு புலனெறி விலங்குறு **வீர**
திங்கள் வார்சடைத் தெய்வ நாயக
னொருகலை யேனு முணரா னஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள் காணிற்
கண்களோ வொன்று காலையிற் காணு
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்
பழிப்பி னொன்று விழிப்பி னெரியு

மாயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனாற்
புகழ்ச்சி விருப்பன் போலு
மிகழ்ச்சி யறியா வென்பணி வானே. 24

நேரிசை வெண்பா

வானும் புகழ்**புகலி மன்னன்**றொடர்பொன்று
தேனுந் திதழியோன் சீரேடு—தானுங்
கரியாய் மொழியுங் கரியாய் விடாம
லெரியா ரழல்வீழ்ந் தெழுந்து. 25

கட்டளைக் கலித்துறை

துடைவாழை மேன்மட வாரல்குற் பாம்பு தொடமயங்கி
நடைவாய் பிணமெனப் பட்டார் பெறுகிலர் நச்சுகுலை
யுடைவாழை மேலுர கந்தீண்ட மாய்ந்த வொருவனுயி
ரடைவா னருள்புரி யுந்**திரு நாவுக் கரசினை**யே. 26

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

அரசன் பரிமேல் வரநெடுநல் யானை
யெருத்தத் தமர்ந்து போய்
வரதன் கைலை மலையடைந்த **மணியே**
மணிநீ ரிடுப சுப்பொன்
றிரைசங் கெறியுங் குளத்துவரச் செங்கற்
செம்பொ னாப்பாடும்
பரிசின் றெனக்குன் செம்பவளத்
திருவாய் மலர்ந்து பகர்வாயே. 27

நேரிசையாசிரியப்பா

பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெறாரி னழுங்கி
நெஞ்சநெக் குருகி நிற்பை நீயே
பேயேன் பெறாது பெற்றார் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே
யன்ன மாடு மகன்றுறைப் பொய்கை
வாதவூ ரன்ப வாத லாலே
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
செஞ்சத் தவல மிலரெனுஞ்
செஞ்சொற் பொருளின் றேற்றறிந் தேனே. 28

நேரிசை வெண்பா

தேனே றலர்சூடிச் சில்பலிக்கென் றூர்திரியு
மானேறி யாண்டுப்பெற் றான்கொனீ—தானேறும்
வெள்ளைமணி யென்று வினாவுவோம் வாங்கியவப்
பிள்ளையையாங் காணப் பெறின். 29

கட்டளைக் கலித்துறை

பெற்றா னினைப்பெற் றவர்போற் பெறலும் பிறப்பதுண்டே
னற்றா ரணியி னினைப்போற் பிறப்பது நல்லகண்டாய்
செற்றார் புரமெரி செய்தவில் வீரன் றிருப்பெயரே
பற்றா மறிவெண் டிரைக்கட னீந்திய பாவலனே. 30

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

பாவாய்ப் பொழிந்த வானமுதப்
பவளத் திருவாய் நம்பிநீ
சேவாய்ப் பொருதுந் தருமமுடைத்
தேவன் மலைக்குப் போம்பொழுது
காவாய்ப் பயந்த தடக்கைமலர்க்
கழறிற் றறிவார் கடாவிவரு
மாவாய்ப் பிறக்கக் கிடையாதே
மாவாய்ப் பிறக்குந் திருமாற்கே. 31

நேரிசையாசிரியப்பா

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தி
னீழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா **ணிக்க**
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலின்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுர வாசக
மோதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே. 32

நேரிசை வெண்பா

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடையை—
மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து 33

கட்டளைக்கலித்துறை

ஊர்ந்து வருமிள வேறுடை யான்ற
னுளத்தருளாற்
சார்ந்து சமண்வீட் டுறுமுனக் கேவருஞ் சைவநலங்
கூர்ந்து மிளிர்தரு **நாவர சேநல்** குரவுமுனஞ்
சேர்ந்து மருவினர்க் கேசிறந் தோங்குறுஞ்
செல்வமுமே. 34

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

செல்வநல் லொற்றி யூரன் செய்யசங் கிலியா லார்த்து
மல்லலம் பரவை தன்கண் மாழ்குற வமிழ்த்து மேனு
மல்லுநன் பகலு நீங்கா தவன்மகி ழடியி லெய்தி
நல்லவின் படைந்தி ருப்ப **னம்பியா ரூரன்** றானே.
35

நேரிசையாசிரியப்பா

தானே முத்தி தருகுவன் சிவனவ
னடியன் **வாத வூரனைக்**
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே. 36

நேரிசை வெண்பா

வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங்கல்வி
நல்லா தரவின்ப ஞானங்க—ளெல்லாந்
திருஞான சம்பந்தன் சேவடியே யென்னு
மொருஞான சம்பந்த முற்று. 37

கட்டளைக்கலித்துறை

உற்றா னலன் றவந் தீயினின் றானல னூண்புனலா
வற்றா னலனுகர் வுந்**திரு நாவுக் கரசெ**னுமோர்
சொற்றா னெழுதியுங் கூறியு மேயென் றுந் துன்பில்பதம்
பெற்றா னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே. 38

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்

பெருமிழலைக் குறும்பரெனும் பரம யோகி
பெரிதுவந்துன் றிருவடித்தா மரையைப் போற்றி
விரைமலர்தூய் வந்தனைசெய் கின்றானென்றால்
விளங்கிழையா ரிருவரொடு முயங்கலாமோ
வுரைமதிநின் றனைவெறுப்ப தென்கொ னின்னை
யுடையானுக் கடுத்தசெய லுனக்கு மாயிற்
சுரர்முனிவர் பரவலுறும் பெருஞ்**சீர்த் தொண்டத்
தொகைசெய்தோ** யறமுதனால் வகைசெய்
தோயே. 39

நேரிசையாசிரியப்பா

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் **வாதவூ ரன்ப**
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே. 40

தேவாரம் திருவாசகம் என்கிற தமிழ்வேதஞ் செய்தருளிய சைவ சித்தாந்த சமயாசாரியராகிய நால்வர்களிலே **திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாருக்கு வெண்பாவும், திருநாவுக்கரசு நாயனாருக்குக் கலித்துறையும், சுந்தரமூர்த்தி நாயனாருக்கு விருத்தமும், மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அகவலுமாக** அருளிச்செய்த நால்வர் நான்மணிமாலை முற்றுப் பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

12-வது திருப்பாடற் குறிப்பு

கடனிறவண் ணக்கவியிற் கஞலியமெய்த் தொண்டர்
கணம்புல்ல ரியற்பகையார் கஞ்சாற ரிளையான்
குடிமாற ரமர்நீதி கோதிலதி பத்தர்
கூரரிவாட் டாயர்திருக் குறிப்பறிநற் றொண்ட
ரடல்கொள் கலிக் கம்பர்மைந்த ராயசண்டி கேச
ரரியசிறுத் தொண்டர்சுற்ற மதுகளைகோட் புலியார்
திடமுடைய செருத்துணையார் திருநீலகண்டர்
செப்புமிவ ராமென்னத் தேர்ந்தறிக முறையே.

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க.

உ

ஸ்ரீ பாலசித்த குரவே நம :

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க

நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

இயற்றியருளிய

நன்னெறி

ஸ்ரீ சிவஞானபாலய தேசிகர் திருவடி வாழ்க.

நன்னெறி

காப்பு

மின்னெறி சடாமுடி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.

என்று முகம னியம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவு நயந்து. 1

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொற் பிறிதென்க—வீசற்கு
நல்லோ னெறிசிலையோ நன்னுதா லொண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு. 2

தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்
தங்கட் குரியவராற் றாங்கொள்க—தங்கநெடுங்
குன்றினாற் செய்தனைய கொங்கையா யாவின்பால்
கன்றினாற் கொள்ப கறந்து. 3

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. 4

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம். 5

காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—யோதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கறான்
கண்ணிரண்டு மொன்றையே காண். 6

கடலே யனையம்யாங் கல்வியா லென்னு
மடலே றனையசெருக் காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலு முள்ளணப் படும். 7

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு. 8

மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவிற்—பலியேல்
கடவு ளவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து. 9

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகி
னிறையிருளை நீக்குமே நின்று. 10

பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாந்—துப்பிற்
சுழற்றுங்கொல் கற்றூணைச் சூறா வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் றுரும்பு. 11

வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பிற்
பொருந்துத றானே புதுமை—திருந்திழாய்
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு. 12

பெருக்க மொடுசுருக்கம் பெற்றபொருட் கேற்ப
விருப்ப மொடுகொடுப்பர் மேலோர்—சுரக்கு
மலையளவு நின்றமுலை மாதே மதியின்
கலையளவு நின்ற கதிர். 13

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்த—லிலையா
லிரைக்கும்வண் டுதுமல ரீர்ங்கோதாய் மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு. 14

இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யு—நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூ றெரியும்
விழியிலார்க் கேது விளக்கு 15

தம்மையுந் தங்க டலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மி
னிழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ்செல் லாதோ கடல். 16

எந்தைநல் கூர்ந்தா னிரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் மீகை மறுப்பரோ—பைந்தொடீ
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி. 17

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே—பொன்செ
யதிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல். 18

நல்லோர் வரவா னகைமுகங்கொண் டின்புறீஇ
யல்லோர் வரவா னழுங்குவார்—வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர. 19

பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ள
மெரியி னிழுதாவ ரென்க—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். 20

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்து
மெழுத்தறிவார்க் காணி னிலையா—மெழுத்தறிவா
ராயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை. 21

ஆக்கு மறிவா னலது பிறப்பினான்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றுங்
கவரார்கடலின் கடு. 22

பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்ற
றிகழ்ச்சி தருநெஞ்சத் திட்ப—நெகிழ்ச்சி
பெறும்பூரிக் கின்றமுலைப் பேதாய் பலகா
லெறும்பூரக் கற்குழியு மே. 23

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி. 24

கல்லா வறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகன நண்ணாரே—வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணாய் நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள். 25

உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்—மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு. 26

கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வ—ரம்மா
முளைக்கு மெயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதா மென்று. 27

முனிவினு நல்குவர் மூதறிஞ ருள்ளக்
கனிவினு நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினு மாகுங் கதலிதா னெட்டிபழுத்
தாயினு மாமோ வறை. 28

உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோ
ரடுக்கு மொருகோடி யாக—நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியா யஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான். 29

கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுதன்மு
னுள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு. 30

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது. 31

பன்னும் பனுவற் பயன்றேர றிவிலார்
மன்னு மறங்கள் வலியிலவே—நன்னுதால்
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான். 32

எள்ளா திருப்ப விழிஞர்போற் றற்குரியர்
விள்ளா வறிஞா து வேண்டாரே—தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல். 33

அறிவுடையா ரன்றி யதுபெறார் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறிதும்—பிறைநுதால்
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு. 34

கற்ற வறிவினரைக் காமுறுவர் மேன்மக்கண்
மற்றையர்தா மென்று மதியாரே—வெற்றிநெடு
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். 35

தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோ—ரெக்காலு
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய். 36

பெரியார்முற் றன்னைப் புனைந்துரைத்த பேதை
தரியா துயர்வகன்று தாழுந்—தெரியாய்கொல்
பொன்னுயர்வு தீர்த்த புணர்முலையாய் விந்தமலை
தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து. 37

நல்லார் செயுங்கேண்மை நாடோறு நன்றாகு
மல்லார் செயுங்கேண்மை யாகாதே—நல்லாய்கேள்
காய்முற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னென்னாகிப் போம். 38

கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி
யுற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே—பொற்றொடீ
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
வன்றே மணமுடைய தாம். 39

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றொவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண். **40**

நன்னெறி முற்றிற்று

ஸ்ரீ சிவஞானபாலய தேசிகர் திருவடிவாழ்க.

சோண சைல மாலையின்
பாட்டு முதற்குறிப்பு அகராதி

உ

நால்வர் நான்மணி மாலையின்
பாட்டு முதற்குறிப்பு அகராதி